**கவனிக்க.**- *2023.05.19 ஆந் திகதிய 2333 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2334 - 2023 මැයි මස 26 වැනි සිකුරාදා - 2023.05.26

*2334 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | 566 |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 568 |


**கவனிக்க.**- *வங்கித் தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2023, மே 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2023, யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# வரவு செலவுத் திரட்டுகள்

## நிதி அறிக்கைகள் வெளியீடு

ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை

*31.12.2022 ஆம் ஆண்டு முடிவடையும் ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபையின் நிதிச் செயற்பாடுகள் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள், 1988 ஆம் ஆண்டின் விதி 216 இன் விதிகளின்படி தணிக்கை செய்யப்பட வேண்டும். 15.1987 வெளியீடு, பணப்-புழக்க அறிக்கை 31/12/2021 மற்றும் நிதி நிலை அறிக்கை 31/12/2022 அன்று பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடுவேன்.*

செயலாளர்,
ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆராச்சிக்கட்டுவ,
2023, ஏப்பிறல் 27.

**அட்டவணை I**

*31.12.2022 திகதியிட்ட இறுதி ஆண்டுக்கான நிதி செயல்பாடுகளின் அறிக்கை.*

| | 2022.12.31 | 2021.12.31 |
|---|---|---|
| இயக்க வருமானம் | | |
| அரசு தொடர் பங்களிப்பு | 40,266,707.86 | 37,483,347.54 |
| இயக்க வருமானம் | 37,925,699.23 | 32,638,192.63 |
| மொத்த இயக்க வருமானம் | 78,192,407.09 | 70,121,540.17 |
| இயக்க செலவுகள் | 63,128,500.10 | 59,747,313.10 |
| ஆண்டுக்கான இயக்க உபரி /பற்றாக்குறை | 15,063,906.99 | 10,374,227.07 |
| மூலதன ரசீதுகள் | 0 | 2,201,941.86 |
| மூலதன செலவு | 748,370.75 | 5,671,552.15 |
| ஆண்டு மிகை /பற்றாக்குறை | 14,315,536.24 | 6,904,616.78 |

**அட்டவணை II**

*2022/12/31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று*

| **சொத்துக்கள்** | 2022.12.31 | 2022.12.31 |
|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | |
| ஆதனம், பொறித்தொதி, உபகரணம் | 220,237,415.63 | 219,608,053.38 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| இருப்பு | 2,630,361.56 | 1,839,747.92 |
| வருமான கடன்பட்டோர் | 38,784,187.45 | 54,438,307.11 |
| ஊழியர் கடனும் முற்பணமும் | 8,337,294.83 | 7,564,844.76 |
| முதலீடுகள் | 55,844,480.05 | 42,614,270.80 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 11,905,150.42 | 8,444,339.19 |
| பெறவேண்டிய வருமானம் | 1,870,109.58 | 77,905.09 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 339,608,999.52 | 334,578,468.25 |
| உரிமை மூலதனமும் பொறுப்புக்களும் | | |
| திரண்ட நிதியமும் ஒதுக்கமும் | 326,312,821.98 | 309,449,093.57 |
| **பொறுப்புக்கள்** | | |
| நடப்புப் பொறுப்புக்கள் | 13,296,177.54 | 25,138,374.68 |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | 339,608,999.52 | 334,587,468.25 |

**அட்டவணை III**

**ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபை**

*2022.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்வுக் கூற்று*

| | 2022.12.31 | 2021.12.31 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்வு** | | |
| சாதாரண நடவடிக்கையிலிருந்தான (மிகை/குறைவு) | 15,063,906.99 | 103,74,227.07 |
| **பணமல்லாத அசைவுகளுக்கான சீராக்கம்** | | |
| தேய்மானம்/வட்டி | - | |
| பணிக்கொடை ஏற்பாடு | - | |
| முந்திய வருட சீராக்கம் | 1,918,829.92 | (3,715,268.14) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன் செயற்பாட்டு (மிகை /குறைவு)** | **16,982,736.91** | **6,658,958.93** |
| இருப்பு /கடன்படுநர், பிற வருமதிகள் (அதிகரிப்பு/குறைவு) | 12,298,815.46 | 13,718,482.91 |
| கடன்கொடுநர், பிற சென்மதிகளின் (அதிகரிப்பு /குறைவு) | (11,842,197.14) | 5,804,448.91 |
| **01. செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு** | **17,439,391.23** | **26,181,890.75** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்வு** | | |
| ஆதன (கொள்ளல்) விற்றல் | (13,230,209.25) | (28,749,483.05) |
| மூலதன செலவினம் | (78,370.75) | (5,671,552.15) |
| **02. முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு** | (13,978,580) | (34,421,035.20) |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்வு** | | |
| மூலதன பெறுவனவு | - | 2,201,941.86 |
| கடன் எடுத்தல் /(செலுத்தல்) | - | - |
| **03. நிதி நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்வு** | - | 2,201,941.86 |
| **வருடத்தினுள் தேறிய அசைவுகள் (123)** | 3,460,811.23 | (6,037,202.59) |
| **வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும்** | 8,444,339.19 | 14,481,541.78 |
| **வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு 11)** | 11,905,150.42 | 8,444,339.19 |
| **குறிப்பு 11** | | |
| மக்கள் வங்கி - சிலாபம் | | |
| பொதுக் கணக்கு - 24100150863528 | 11,436,569.88 | 7,884,136.60 |
| ஊழியர் கடன் கணக்கு - 24100240863528 | 468,580.54 | 560,202.59 |
| **கையிலுள்ள காசு** | 11,905,150.42 | 8,444,339.19 |

05 - 313

# நானாவித அறிவித்தல்கள்

திருத்தம்

**பாணந்துறை பிரதேச சபை**

*முச்சக்கர வண்டிகள் நிறுத்திவைப்பதற்கான உத்தரவுப்பத்திரக் கட்டணம் விதித்தல் - 2023*

*2022.12.23 ஆம் திகதிய 2312 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் தொடர் இலக்கம் 12-484/6 இன் கீழ், பக்கம் 6165 இல் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான முச்சக்கர வண்டிகளை நிறுத்திவைப்பதற்கான உத்தரவுப்பத்திரக் கட்டணம் விதித்தல் எனும் பிரேரணையில் (10) பத்தாவது வரிசையில் "விளம்பர அறிவித்தல் தொடர்பான துணை விதிச் சட்டத்தில்" என்பதற்கு பதிலாக முச்சக்கர வண்டிகள் நிறுத்திவைத்தல் தொடர்பான துனை விதிச் சட்டத்தில் 9 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்த துணை விதிச் சட்டத்தில் என திருத்தம் செய்யப்பட வேண்டும் னெ இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

*தகனபீடங்கள் தொடர்பாக கட்டணம் அறவிடல் - 2023*

*2022.12.23 ஆம் திகதிய 2312 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் தொடர் இலக்கம் 12-484/9 இன் கீழ், பக்கம் 6167 இல் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்காக தகனபீடங்கள் தொடர்பான கட்டணம் அறவிடும் பிரேரணையில் ஆறாவது (06) வரிசையில் "இலக்கம் 178/22" என்பதற்கு பதிலாக "இலக்கம் 178/22" என திருத்தப்பட வேண்டும் எனவும் அதே பிரேரணையில் பத்தாவது (10) வரிசையில் "விளம்பர அறவித்தல் தொடர்பான துணை விதிச் சட்டத்தில் " என்பதற்கு பதிலாக "தகனபீடங்கள் தொடர்பான துணை விதிச் சட்டத்தில்" என திருத்தப்பட வேண்டும் எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

*சேவைகள் மற்றும் கட்டணம் அறவிடுதல் - 2023*

*2022.12.23 ஆந் திகதிய 2312 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் தொடர் இலக்கம் 12- 484/ 11 இன் கீழ், பக்கம் 6169 இல் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்கான சேவைகள் மற்றும் கட்டணம் அறவிடுதல் பிரேரணையில் ஆறாவது (06) வரிசையில் "இலக்கம் 178/ 22" என்பதற்கு பதிலாக "இலக்கம் 1978/ 22" என திருத்தப்பட வேண்டும் என இத்தல் அறிவித்துக்கொள்கின்றேன்.*

எல். எச். நுவன் சஞ்ஜய பர்னாந்து
செயலாளரும் அதிகாரங்கள், வேலைகள் மற்றும்
கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பாணந்துறை பிரதேச சபை,
வாத்துவை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*பாணந்துறை,*
*2023, ஏப்பிறல் 27.*

*05 - 306/1*

---

திருத்தம்

**பாணந்துறை பிரதேச சபை**

*விளம்பர அறிவித்தல்/(காட்சி சூழல்) சம்பந்தமான உத்தரவுப் பத்திரக் கட்டணம் விதித்தல் - 2023*

*பாணந்துறை பிரதேச சபையின் செயலாளரும் பாணந்துறை பிரதேச சபையின் அதிகாரங்கள், வேலைகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவின்*

மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பாணந்துறை பிரதேச சபையினால் 2023 ஆம் ஆண்டிற்காக விளம்பர அறிவித்தல்/(காட்சி சூழல்) சம்பந்தமான உத்தரவுப் பத்திர கட்டணம் விதித்தல் தொடர்பில் 2023.12.23 ஆம் திகதிய 2312 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் தொடர் இலக்கம் 12-484/5 இன் கீழ், பக்கம் 6164 இல் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்காக விளம்பர அறிவித்தல்/(காட்சி சூழல்) சம்பந்தமான உத்தரவுப் பத்திர கட்டணம் விதித்தல் பற்றிய பிரேரணையில், விண்ணப்பப்படிவம் ஒன்றுக்காக ரூபா 1000 கட்டணம் என்பதற்கு பதிலாக 'விண்ணப்பப்படிவம் ஒன்றுக்காக ரூபா 100/- கட்டணம் என கீழ்க் காணும் வகையில் திருத்துவதற்கு தீர்மானிக்கின்றேன்.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (தரப்படுத்தப்பெற்ற துணை விதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு, இலக்கம் 1888/47 கொண்ட மற்றும் 2014 நவெம்பர் மாதம் 14 ஆம் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கொண்ட மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (தரப்படுத்தப்பெற்ற துணை விதி) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2016.08.03 ஆம் திகதிய இலக்கம் 1978/22 கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் சரிசெய்யப்பட்ட 2015.12.28 ஆம் திகதிய இலக்கம் 1947/6 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரப்படுத்தப்பெற்ற துணை விதிச் சட்டத்தில் விளம்பர அறிவித்தல் தொடர்பான துணை விதிச் சட்டம் 2020.01.17 ஆம் திகதிய இலக்கம் 2159 கொண்ட வர்த்தமானி மூலம் சரிசெய்யப்பட்ட 2016.11.25 ஆம் திகதிய இலக்கம் 1995 கொண்ட வர்த்தமானி மூலம் பாணந்துறை பிரதேச சபையினால் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் அந்த விளம்பர அறிவித்தல் பற்றிய துணை விதிச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் மூலம் பாணந்துறை பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பாணந்துறை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஏதேனும் வகையில் காட்சிப்படும் வகையில் விளம்பர அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வகையில் கட்டணம் 2023 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டும் எனவும், அதே துணை விதி சட்டத்தின் 5(2) ஆம் பிரிவின் பிரகாரம் விண்ணப்பப்படிவமொன்றுக்கு ரூபா 100.00 கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| தொடர் இல. | பெயர்ப்பலகையின் தன்மை | வர்க்க அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 03 மாதத்திற்கு குறைந்த | 03 மாதத்திற்கும் 06 மாதத்திற்கும் உட்பட்ட | ஒரு வருடம் |
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01 | ஏதேனும் சுவர் அல்லது மதிலில் காட்சிப்படுத்தும் விளம்பர அறிவித்தலொன்று | 1 - க்கு குறைந்த | 250.00 | 350.00 | 500.00 |
| | | 1- க்கு கூடிய | ஒன்றுக்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 200.00 வீதம் | | |
| 02 | புடவை டிஜிடல் பெனர் | 3 - க்கு குறைந்த | 250.00 | 350.00 | 500.00 |
| | | 3- க்கு கூடிய | 3 க்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 200.00 வீதம் | | |
| 03 | தகடு அல்லது மரப்பலகை மூலம் காட்சிப்படுத்தும் விளம்பர அறிவித்தல் | 1 - க்கு குறைந்த | 500.00 | 750.00 | 1000.00 |
| | | 1- க்கு கூடிய | ஒன்றுக்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 300.00 வீதம் | | |
| 04 | மின்சாரத்தை பயன்படுத்தி இயக்கும் விளம்பர அறிவித்தல் | 1 - க்கு குறைந்த | 500.00 | 750.00 | 1000.00 |
| | | 1- க்கு கூடிய | ஒன்றுக்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 200.00 வீதம் | | |

| தொடர் இல. | பெயர்ப் பலகையின் தன்மை | வர்க்க அடி அளவு | கட்டணம் ரூபா | | |
|---|---|---|---|---|---|
| | | | 03 மாதத்திற்கு குறைந்த | 03 மாதத்திற்கும் 06 மாதத்திற்கும் உட்பட்ட | ஒரு வருடம் |
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 06 | பிளாஸ்டிக் அல்லது பைபர் பெயர் பலகை மூலம் செய்யப்படும் விளம்பர அறிவித்தல் | 1 - க்கு குறைந்த | 250.00 | 350.00 | 500.00 |
| | | 1- க்கு கூடிய | ஒன்றுக்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 300.00 வீதம் | | |
| 07 | இலத்திரனியல் உபகரணங்களை பயன்படுத்தி செய்யப்படுகின்ற விளம்பர அறிவித்தல் | 1 - க்கு குறைந்த | 750.00 | 850.00 | 1000.00 |
| | | 1- க்கு கூடிய | ஒன்றுக்கு கூடுகின்ற ஒவ்வொரு வர்க்க மீற்றருக்கும் அல்லது அதில் ஒரு பகுதிக்கு தலா ரூபா 500.00 வீதம் | | |

எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் மேற்படி சகல கட்டணங்கள் தொடர்பிலும் வரிகள் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

எல். எச். நுவன் சஞ்ஜய பர்னாந்து
செயலாளரும். அதிகாரங்கள், வேலைகள் மற்றும்
கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பாணந்துறை பிரதேச சபை,
வாத்துவை.

பிரதேச சபை அலுவலகம்,
பாணந்துறை,
2023, ஏப்பிறல் 27.

05 - 306/2

---

**பாணந்துறை பிரதேச சபை**

ஏனைய கட்டணம் அறவிடுதல் - 2023

பாணந்துறை பிரதேச சபையின் செயலாளரும் பாணந்துறை பிரதேச சபையின் அதிகாரங்கள், வேலைகள் மற்றும் கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியாகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவின் மூலம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பாணந்துறை பிரதேச சபைக்கு சொந்தமான களுதேவல இல் அமைந்துள்ள உடல் பயிற்சி நிலையத்தில் சேவை பெறுவதற்கு வருகின்றவர்களுக்காக கீழ்க் கண்டவாறு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் எனவும், அதன்படி 2022.12.23 ஆம் திகதிய 2312ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் தொடர் இலக்கம் 12-484/12 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்காக ஏனைய கட்டணங்கள் அறவிடுதலின் கீழான உப அட்டவணையில் கீழே குறிப்பிடப்படும் அக்கட்டணம் அறவிடுதல் உள்ளடக்கப்படுவதாகவும் அக் கட்டண அறவிடுதல் 2023.06.01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.

மாதாந்த அங்கத்துவப் பணம் (வயது வந்தவர்களுக்கு) - ரூபா 750.00

மாதாந்த அங்கத்துவப் பணம் (வயது 19 இற்கு குறைந்த பாடசாலை பிள்ளைகளுக்கு) - ரூபா 500.00

அங்கத்துவம் 06 மாதங்களுக்காக ஒரே தடவையில் செலுத்தப்படும் போது,

வயது வந்தவர்களுக்கு - ரூபா 3000.00

பாடசாலை பிள்ளைகளுக்கு (வயது 19 இற்கு குறைந்த) - ரூபா 2500.00

எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் மேற்படி சகல கட்டணங்கள் தொடர்பிலும் வரிகள் சேர்த்துக் கொள்ளப்படலாம்.

எல். எச். நுவன் சஞ்ஜய பர்னாந்து,
செயலாளரும். அதிகாரங்கள், வேலைகள் மற்றும்
கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரியும்,
பாணந்துறை பிரதேச சபை,
வாத்துவை.

பிரதேச சபை அலுவலகம்,
பாணந்துறை,
2023, ஏப்பிறல் 27.

05 - 306/3